# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in

**<u>முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்</u>**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 41 / 2016</u>**

திரு. P. குமாரசாமி,
த/பெ பெரிய தம்பி கவுண்டர்,
தவளகிரி தோட்டம்,
சிவியார் பாளையம்,
ஆலத்துகொம்பை கிராமம்
சத்தியமங்கலம் மேல் முறையீட்டாளர்
(திரு. D.R. அருண்குமார், வழக்கறிஞர்)

எதிர்

1) செயற் பொறியாளர்/சத்தியமங்கலம்,
கோபி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33A/4, சிவா காம்ப்ளக்ஸ்,
அத்தேனி ரோடு, சத்தியமங்கலம் – 638 401.

2) உதவி செயற்பொறியாளர்/கிழக்கு/சத்தியமங்கலம்,
கோபி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
30, நிர்மலா தியேட்டர் ரோடு,
சத்தியமங்கலம் – 638 401.

3) உதவி பொறியாளர்,
கொடிவேரி,
கோபி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
7/2, மாரியம்மன் கோவில் தெரு,
ஒட்டர்பாளையம், கொடிவேரி அஞ்சல்,
கோபி தாலுகா, ஈரோடு – 638 503. எதிர்மனுதாரர்கள்
(திரு. K.K. வாசுதேவன், உதவி செயற்பொறியாளர்/
கிழக்கு/சத்தியமங்கலம்)

**<u>கேட்புரை நாள்: 28–7–2016</u>**

**<u>ஆணை நாள் : 5–10–2016</u>**

திரு. P. குமாரசாமி, தவளகிரி கோட்டம், சத்தியமங்கலம் அவர்களின் 7.5.2016 நாளிட்ட மனு மேல் முறையீட்டு மனு எண் 41/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 28.7.2016 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :</u>**

மேல்முறையீட்டாளர், அவருக்கு நியாமாக கிடைக்க வேண்டிய மின் இணைப்பை 10/1Aல் உள்ள கிணற்றிற்கோ அல்லது அவருக்கு பாத்தியப்பட்ட 69/2Aல் உள்ள வேறு ஆழ் குழாய் கிணற்றிற்கோ வழங்க உத்தரவு இட வேண்டும் என்று கோரியுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 க.ச. எண் 10/1ல் உள்ள கிணற்றில் 20 HP மின்பளுவுடன் விவசாய மின் இணைப்பு பெறுவதற்காக 31.12.1993ல் மேல்முறையீட்டாளர் விண்ணப்பம் சமர்பித்துள்ளார். அந்த விண்ணப்பம் பதிவு எண் 393/93–94 ஆக எதிர்மனுதாரர் 1ன்அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2.2 மேல் முறையீட்டாளரின் தயார் நிலையை பதிவு செய்வதற்கு 29–10–2010 அன்று சிறப்பு முன்னுரிமை திட்டத்தின் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

2.3 மேல் முறையீட்டாளரின் கிணறு பவானி ஆற்றின் அருகில் உள்ளதால், பொதுப் பணித்துறையின் தடையின்மை சான்று 31.1.2016ம் தேதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. 28.1.2016, அன்று, மேற்கண்ட விண்ணப்பத்திற்கு மின்

இணைப்பை க.ச.எண் 69/2Aல் உள்ள பூமியில் மாற்றி தர வேண்டும் என்று, மேல்முறையீட்டாளரால் மனு செய்யப்பட்டுள்ளது. அதுவும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

2.4 மேல்முறையீட்டாளர், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு, தன்னுடைய விண்ணப்பத்திற்கு 10/1Aல் உள்ள கிணறு அல்லது 69/2Aல் உள்ள ஆழ் குழாய் கிணறு இவை இரண்டில் ஏதேனும் ஒன்றில் மேற்கண்ட விண்ணப்பத்திற்கு விவசாய மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று மனு செய்துள்ளார். மன்றம், அவரின் கோரிக்கையை நிராகரித்து 4.4.2016 நாளிட்ட ஆணையில் தீர்வு வழங்கியுள்ளது. மேற்கண்ட ஆணையில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்பித்துள்ளார்.

3. <u>மன்றத்தின் தீர்வு</u>

கோபி மின்பகிர்மானவட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், தன்னுடைய தீர்வை 4.4.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த தீர்வின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

" *<u>மன்றத்தின் தீர்வு :-</u>*

*4.1 சத்தி கோட்டம், கிழக்கு / சத்தி உபகோட்டம், கொடிவேரி பிரிவிற்குட்பட்ட குமாரபாளையம் கிராமம், க.ச.எண் : 10/1ல் உள்ள திறந்தவெளி கிணற்றிற்கு 20 HP விவசாய மின் இணைப்பு வேண்டி திரு.P. குமாரசாமி என்பவர் விண்ணப்பம் பதிவு செய்ததின் பேரில் மின் இணைப்பு வழங்க தயார்நிலையை பதிவு செய்ய செயற்பொறியாளர் / இபே / கோபி அவர்கள் க.எண் : செபொ / இபே / ச/ தொ.நு.உ.2/கோ.30 / எண்:96 / 10 நாள் : 29.10.2010 ன் படி மனுதாரருக்கு 30 நாட்கள் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.*

*4.2 மனுதாரர் சுமார் 5 ஆண்டுகள் மற்றும் 3 மாதங்கள் கழித்து 27.1.16 அன்று தனக்கு உடல்நிலை சரியில்லை என தெரிவித்தும், வருவாய் துறையிலிருந்து ஆவணங்கள் பெற காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என தெரிவித்தும், உரிய காலக்கெடுவுக்குள் தயார்நிலையை பதிவு செய்ய இயலவில்லை. எனவே கால அவகாசம் கோரி 27.01.2016 அன்று மனு அளித்துள்ளார். அதன் அடிப்படையில் மின்உரிமம்தாரர், மனுதாரர் கிணற்றை அன்றே களஆய்வு செய்து, கிணறு பவானி ஆற்றின் கரையிலிருந்து 26 மீட்டரில் உள்ளது கண்டறியப்பட்டு, வாரிய உத்தரவு :* circular memo.No. SE/IEMC/EE3/AEE2/AE/D.178/94

*(Tech.Br) dt: 19.05.1994ன்படி பொதுப் பணித்துறையினரிடமிருந்து தடையின்மை சான்று பெற்று தருமாறு மனுதாரருக்கு நேரில் தெரிவித்துள்ளார். மேலும், தயார்நிலை பதிவு செய்ய* ***31.01.2016*** *வரை மட்டுமே கால அவகாசம் உள்ளது எனவும் மனுதாரருக்கு தெரிவித்துள்ளார். மேற்படி கிணற்றிலிருந்து பைப்லைன் அமைத்து மனுதாரருக்கு சொந்தமான வேறு க.ச.எண்களிலுள்ள பூமிகளுக்கு பாசனம் செய்ய மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து பெறப்பட்ட பாதைவாரி அனுமதியை காண்பித்து பொதுப் பணித்துறையினரிடமிருந்து தடையின்மை சான்று பெற வேண்டிய அவசியமில்லை என மனுதாரர் மின்உரிமம்தாரரிடம் தெரிவித்துள்ளார். வாரிய விதிகளின் படி பவானி ஆற்றின் கரையிலிருந்து* ***200*** *மீட்டருக்குள் கிணறு அமைக்கப் பெற்று இருப்பின் வாரிய உத்தரவு : circular memo.No. SE/IEMC/EE3/AEE2/AE/D.178/94 (Tech.Br) dt: 19.05.1994ன்படி பொதுப் பணித்துறையினரிடமிருந்து தடையின்மை சான்று பெறுவது மிகவும் அவசியம் என இம்மன்றம் கருதுகிறது. மேலும், தடையின்மை சான்று பெற்று அளிக்காத காரணத்தினால், அசல் விண்ணப்பம் தகுதியற்றதாகிறது. எனவே மனுதாரர் கோரியபடி அவ்விண்ணப்பத்தை வேறொரு கிணற்றிற்கு மாற்றம் செய்து மின் இணைப்பு வழங்கவும் இயலாது. எனவே, மின்உரிமம்தாரர் மனுதாரரின் கோரிக்கை நிராகரித்தது சரி என இம்மன்றம் கருதுகிறது. எனவே இம்மனு மீதான விசாரணையை இம்மன்றம் இத்துடன் முடித்துக் கொள்கிறது."*

4. **மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :–**

4.1 மன்றத்தின் ஆணை சட்டத்திற்கும் இயற்கை நீதிக்கும் புறம்பானது.

4.2 மன்றத்தின் ஆணை principles of estoppel மற்றும் legitimate expectancyக்கு எதிரானது.

4.3 ஒழுங்குமுறை ஆணையத்தின் விதிகளிலோ அல்லது அரசின் ஆணைகளிலோ, பொதுப்பணித்துறையின் தடையில்லா சான்று பெற்று அளித்தால் தான் பவானி ஆற்றங்கரையிலிருந்து 200 மீட்டருக்குள் உள்ள நிலங்களின் சொந்தக்காரர்கள், மின் இணைப்பு பெறமுடியும் என்று தெரிவிக்கப்படவில்லை. **11.5.1994** நாளிட்ட குறிப்பாணை, சட்டத்திற்கு எதிரானது, சட்ட அங்கீகாரம் பெறாதது, உரிமம்தாரர், சட்டப்படி நிலத்திற்கு உரிமையுள்ளவர்களின் உரிமையை, அற்பமான மற்றும் நிலைக்கதக்கதல்லாத காரணங்களுக்காக நிறுத்த முடியாது.

4.4 மேல்முறையீட்டாளர், மன்றத்திற்கு சமர்பித்துள்ள மனுவில் கீழ்கண்ட வாதங்களை முன் வைத்துள்ளார்.

(i) மனுதாரர் தமக்கு பாத்தியப்பட்ட குமாரபாளையம் கிராமம், க.ச. எண் 10/1ல் உள்ள விவசாய கிணற்றில் மின் மோட்டார் வைப்பதற்காக 20 HP மின் இணைப்பு கோரி கடந்த 31–12–1993 தேதியில் விண்ணப்பித்திருந்தார். மேற்படி விண்ணபத்தின் பதிவு எண். 393/93–94 ஆகும்.

(ii) மேற்படி கிணற்றில் இருந்து மனுதாரர் தனக்கு பாத்தியப்பட்ட விவசாய நிலங்களுக்கு நிலத்தடி குழாய் அமைத்து பாசனம் செய்துகொள்ள ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலரிடம் நி.மு.எண். 14145/93/அ6 நாள் :05–01–1994 உத்திரவு படி அனுமதியும் பெற்றுள்ளார்.

3. மனுதாரர் விண்ணப்பம் செய்த தேதியிலேயே, மின் வாரிய விதிகள் படியும் மின் வாரிய அதிகாரிகள் கேட்ட அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ளார்.

4. 29–10–2010 தேதியில் மின் வாரியத்தின் க.எண் செயற்பொறியாளர் / இளநிலை பொறியாளர் சத்தியமங்கலம்/தொ/நு/உ.2/கொ.30 days (Special)நெ 96/10 என்ற கடிதம் மூலம் மனுதாரருக்கு சிறப்பு முன்னுரிமை திட்டத்தில் புதிய விவசாய மின் இணைப்பு வழங்குவதற்காக தயார் நிலையை பதிவு செய்ய கடிதம் அனுப்பப்பட்டது.

5. மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும், வருவாய் துறையிணரிடமிருந்து ஆவணங்கள் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டதாலும், மனுதாரர் தயார் நிலையை பதிவு செய்ய கால அவகாசம் கேட்டு கடிதம் கொடுத்ததில் மனுதாரருக்கு தயார் நிலையை பதிவு செய்ய மின் வாரியத்தால் 31–01–2016 வரைகால அவகாசம் வழங்கப்பட்டது.

6. மனுதாரர் தனது தயார் நிலையை பதிவு செய்ய 27–01–2016ல் ஒரு கடிதத்தை மின் வாரியத்திற்கு அனுப்பினார், மனுதாரரின் கடிதத்தை பெற்றுக்கொண்ட

மின்வாரியத்தினர், மனுதாரர் மின் இணைப்பு கோரும் கிணறு பவானி ஆற்றுப்பகுதி அருகில் உள்ளதாக கோரி பொதுப்பணித்துறையினரிடம் தடையின்மை சான்று பெற்று கொடுக்குமாறு அன்றே ஒரு கடிதம் அனுப்பினார். மேலும் 31–01–2016 தேதிக்குள் மேற்படி தடையின்மைச் சான்று பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் அந்த கடிதத்தில் தெரியப்படுத்தியிருந்தனர். மேலும் தவறும் பட்சத்தில் கால நீட்டிப்பு வழங்க இயலாது எனவும் தெரிவித்து இருந்தனர்.

7. உடனடியாக மனுதாரர் பொதுப்பணித்துறை அலுவலகத்தை தொடர்பு கொண்டு தடையின்மைச் சான்று கோரினார். ஆனால் பொதுப் பணித்துறையினர் தடையின்மை சான்று கோரி மனுதாரர் விண்ணப்பம் செய்ய உரிமை இல்லை என்றும் மின்சார வாரியம் தடையின்மைச் சான்று கோரி விண்ணப்பித்தால் மட்டுமே அது பரிசீலிக்கப்படும் என்றும் கூறிவிட்டு, மனுதாரரின் மனுவை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர்.

8. மேலும் மாவட்ட வருவாய் அலுவலர் க.ச.எண்.10/1 கிணற்றில் இருந்து நிலத்தடி குழாய் பதித்து தண்ணீர் எடுத்துச் சென்று மனுதாரர் பூமியில் விவசாயம் செய்து கொள்ள பாதைவரி அனுமதி அளித்து உத்திரவிட்டுள்ளதால் பொதுப்பணித்துறையினரிட மிருந்து தடையின்மைச் சான்று எதுவும் பெறவேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை.

9. இந்நிலையில் மனுதாரர் மீண்டும் 28–01–2016 தேதியில் மின் வாரியத்திற்கு க. ச. 10/1A ல் கிராமம் க.ச. எண்/69/2A-ல் உள்ள பூமியில் உள்ள ஆழ்குழாய் கிணற்றுக்கு விண்ணப்ப நிலையிலேயே "shifting" செய்து மின் இணைப்பு வழங்குமாறு அனைத்து ஆவணங்களுடன் அவரது தயார் நிலையை பதிவு செய்ய கடிதம் அனுப்பினார். அக்கடிதம் 3ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பெறப்பட்டு, அவருக்கு மின் இணைப்பு வழங்க முடியாது என திருப்பப்பட்டு விட்டது என கடிதம் அனுப்பப்பட்டது.

10. விவசாயத்திற்காக மின் இணைப்பு கோரி 23 வருடங்கள் காத்திருந்த பின்பு சில அற்ப காரணங்களுக்காக மின் இணைப்பு வழங்காமல் இருப்பது நியாயமானது அல்ல.

11. எனவே, அவருக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய மின் இணைப்பை 10/1Aல் உள்ள கிணற்றிற்கோ, அல்லது அவருக்கு பாத்தியப்பட்ட 69/2Aல் உள்ள வேறு ஆழ்குழாய் கிணற்றிற்கோ வழங்க உத்திரவிட வேண்டுமாய் மனுதாரர் பணிவுடன் வேண்டுகிறார்.

5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:-</u>

1. கொமாரபாளையம் கிராமம் க.ச.எண் 10/1 ல் உள்ள திறந்தவெளி கிணற்றுக்கு இயல்பு வரிசையில் புதிய விவசாய மின் இணைப்பு வேண்டிய திரு. P. குமாரசாமி, த/பெ. பெரிய தம்பி கவுண்டர் அவர்களின் விண்ணப்பம் செயற்பொறியாளர் /இபே/சத்தி அலுவலகத்தில் பதிவு எண் 393/STY/93-94/நாள் 31.12.1993 ன் படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பத்தின் மீது வரிசைப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சிறப்பு முன்னுரிமை திட்டத்தின் கீழ் (Special priority) புதிய மின் இணைப்பு பெற்றுக்கொள்ள தனது தயார் நிலையை பதிவு செய்து கொள்ள க.எண்.செ.பொ/இபே/ச/தொநுஉ.2/கோ.30 நாட்கள் /எண்.96/2010 நாள் 29.10.2010 ன் படி 30 நாட்கள் அறிவிப்பு கடிதம் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் படி 03.12.2010 தேதிக்குள் மனுதாரர் தனது தயார் நிலையை பதிவு செய்து கொள்ள முன்வரவில்லை.

2. தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும் வருவாய் ஆவணங்கள் பெற கால தாமதம் ஏற்பட்ட காரணத்தாலும் குறிப்பிட்ட காலத்திற்குள் தனது தயார் நிலையை பதிவு செய்யவில்லை என தெரிவித்து கால அவகாசம் வழங்குமாறு 27.01.2016 அன்று மனுதாரர் உதவி மின் பொறியாளர் /இபே/ கொடிவேரி அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார். இந்த விண்ணப்பத்தின் பேரில் க.ச.எண்.10/1 கொமாராபாளையம் கிராமத்தில் அமைந்துள்ள மனுதாரருக்கு பாத்தியப்பட்ட திறந்தவெளிக் கிணற்றினை ஆய்வு செய்ததில் மேற்படி கிணறானது பவானி ஆற்றுக்கரை விளிம்பில் அமைந்துள்ளது அறியப்பட்டது.

3. Circular memo No.SE/IEMC/EE3/AEE2/AE/D.178/94 (Tech Br) / Dt. 19.05.1994 ன் படி மேற்படி கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்கிட பொது பணித்துறையினரிடமிருந்து தடையின்மை சான்று பெற்று தருமாறும், மேலும் 29.10.2010ல் வழங்கப்பட்டுள்ள அறிவிப்பு கடிதத்தின் பேரில் தயார் நிலை பதிவு செய்து கொள்ள முழு அளவிலான கால நீட்டிப்பானது 31.01.2016 வரை மட்டுமே உள்ளது என்ற விபரமும் மனுதாரருக்கு கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் கடிதத்தைப் பெற்று கொண்டு ஒப்புகை அளித்துள்ளார்.

4. பொதுபணித்துறையினரிடமிருந்து தடையின்மை சான்று பெற இயலாத சூழ்நிலை என்பதால், மேற்படி விண்ணப்பத்தை க.ச. எண் 69/2A ல் உள்ள ஆழ்குழாய் கிணற்றுக்கு கிணறு மாற்றம் செய்துதர கோரி மனுதாரர் 30.01.2016 அன்று விரைவு அஞ்சல் வாயிலாக உதவிமின் பொறியாளர்/இ&பெ/ கொடிவேரி பிரிவு அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார். பொதுப்பணிதுறையினரிடமிருந்து தடையின்மை சான்று பெற்று அளிக்காத காரணத்தினாலும், 30.01.2016 வரை மட்டுமே கால அவகாசம் வழங்க முடியும் என்ற காரணத்தினாலும் மேற்படி விண்ணபத்தின் மீது நடவடிக்கை எடுத்து செயல்முறைபடுத்த ஒரு நாள் போதுமானதாக இல்லை எனத் தெரிவித்து 08.02.2016 அன்று மனுதாரருக்கு உதவிமின் பொறியாளர்/இ&பே/கொடிவேரி அலுவலகத்திலிருந்து மனுதாரர் அளித்த ஆவணங்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

5. பவானி ஆற்றுக்கரையிலிருந்து 200 மீட்டருக்குள் அமையப் பெற்றுள்ள விவசாய கிணறுகளுக்கு புதிய மின் இணைப்பு வழங்கப்டுவதில் வாரிய உத்திரவு : Circular memo No. SE/IEMC/EE3/E2//D.178/94 (Tech Br) Dt. 19.05.1994 ல் வரையறுக்கப்பட்டுள்ளபடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் கீழ்கண்டவாறு உத்திரவுகள் அளிக்கப்பட்டுள்ளது.

"3. For the cases of application under normal priority / self financing scheme for which extension of supply is requested to the wells lying with in 200 meters

from any river bank / any other water resources have already been entertained and processed before the issue of the above instructions and the progress in varioius stages like.

(i) Reported readiness / works completed

(ii) Reported readiness with party paid the amount / works not taken up/party completed.

(iii) Reported readiness/Party not paid the amount then in all above three cases supply should be extended only on submission of No Objection Certificate from the concerned Superintending Engineer/Public Works Department, by the parties. அதன் படி மனுதாரருக்கு பொதுப்பணி துறையினரிடமிருந்து மறுப்பின்மை சான்று பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

6. மேற்கூறிய வாரிய உத்தரவின்படி, பொதுபணித்துறையினரிடமிருந்து தடையின்மை சான்று பெற்று அளிக்காத காரணத்தினால், அசல் விண்ணப்பமானது தகுதியற்றதாகிறது. எனவே மனுதாரர் கோரியபடி அவ்விண்ணப்பத்தை வேறொரு கிணற்றுக்கு மாற்றம் செய்தும் மின் இணைப்பு வழங்க இயலாது.

6. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

**6.1** மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரர்களும், தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 28.7.2016 அன்று கேட்புரை நடத்தப்பட்டது.

**6.2** மேல்முறையீட்டாளரின் சார்பாக திரு D.R. அருண்குமார், வழக்கறிஞர் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

**6.3** எதிர்மனுதாரர் சார்பில், திரு. K.K. வாசுதேவன், உதவி செயற்பொறியாளர் கிழக்கு சத்தியமங்கலம் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

7. <u>மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 மேல்முறையீட்டாளரின் சார்பில் கேட்புரையில் கலந்துகொண்ட திரு. D.R. அருண்குமார் வழக்கறிஞர் அவர்கள் மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 படித்த வழக்கறிஞர் அவர்கள், மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு 17 வருடங்கள் கழித்து, பொதுப்பணித்துறையின் தடையில்லா சான்று கேட்டு தயார்நிலையை பதிவு செய்ய முடியாது என்று மறுப்பது நியாயமல்ல என்று வாதிட்டார்.

7.3 மேலும், மின்சாரம் கோரும் விண்ணப்பம் பதிவு செய்யும் பொழுது இல்லாத விதி பிற்காலத்தில் கொண்டுவரப்பட்டு தயார் நிலையை பதிவு செய்யும் பொழுது அமல்படுத்துவது, அந்த விண்ணப்பதாரரின் உரிமையை பாதிக்கின்ற செயல் என்று வாதிட்டார்.

7.4 விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டுள்ளதால், அந்த விண்ணப்பத்தை, ஆற்றுப்படுக்கையிலிருந்து 200 மீட்டர் தொலைவிற்கு அப்பால் உள்ள கிணற்றிற்கு மாற்றி தர வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்க மறுப்பதும் இயற்கை நீதிக்கு அப்பாற்பட்டது என்று வாதிட்டுள்ளார்.

8. <u>எதிர்மனுதாரரின் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள் : -</u>

8.1 எதிர்மனுதாரர் – 2, திரு. K.K. வாசுதேவன் உதவி செயற்பொறியாளர் கிழக்கு, சத்திய மங்கலம் அவர்கள் எதிர்மனுதாரரது பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 தயார்நிலையை 3.12.2010ற்குள் பதிவு செய்ய கோரி 29.10.2010ல் அனுப்பிய அறிவிப்பிற்கு மேல்முறையீட்டாளர் தன்னுடைய தயார்நிலையை பதிவு செய்யவில்லை. ஆனால் கால அவகாசம் கோரி 27.1.2016ல் தான் மனுவை உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் சமர்பித்துள்ளார். அவ்வாறு சமர்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் காரணமாக, திறந்தவெளி கிணற்றை ஆய்வு செய்யும்பொழுது மேற்படி மின் இணைப்பு கோரும் கிணறு பவானி ஆற்றின் கரையில் உள்ளதால் பொதுப்பணித் துறையின் தடையின்மை சான்று பெற்று சமர்பிக்கும்படி

அன்றே தெரிவிக்கப்பட்டது. மேலும், தயார்நிலையை பதிவு செய்ய கால அவகாசம் 31.01.2016 வரைதான் உள்ளது என்றும் 27.1.2016ல் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். மேலும், மேல்முறையீட்டாளர் 30.01.2016ல் speed post மூலம் மேற்கண்ட விவசாய விண்ணப்பத்தை கொமாரபாளையம் கிராமம் க.ச. எண் 10/1 Aல் உள்ள திறந்தவெளி கிணற்றிற்கு பதிலாக க.ச. எண். 69/2Aல் உள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு மாற்றி மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று கோரினார். 31.01.2016 அன்றும், கால அளவு முடிந்துவிட்டதால் ஒருநாளில், அந்த விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்பதால், கால நீட்டிப்பு வழங்க முடியாது என்று பதில் அனுப்பப்பட்டுவிட்டது என்றும் வாதிட்டார்.

8.3 மேலும், பொதுப் பணித்துறையின் தடையின்மை சான்று இல்லை என்பதால், பதிவு செய்யப்பட்ட விண்ணப்பமும், தகுதியற்றது என்பதால், மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான க.ச.எண். மாற்றம் செய்து மின் இணைப்பு வழங்க முடியாது என்றும் வாதிட்டார்.

8.4 மேலும், ஒரு விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தை வேறு சர்வே எண்ணில் உள்ள விண்ணப்பதாரருக்கு சொந்தமான கிணற்றிற்கு மாற்ற வேண்டும் எனில், விண்ணப்பம் செய்துள்ள கிணற்றில் போதுமான நீர் இல்லை என்றாலும், அல்லது கிணற்றின் நீர் மாசுபட்டு இருந்தாலோ தான் வாரிய விதிப்படி மாற்ற முடியும். இங்கு சர்வே எண் 10/1 Aல் உள்ள கிணற்றில் தண்ணீர் உள்ளது என்பதால், கிணறு மாற்றும் விதிகளுக்கு இணங்க இல்லை என்றும் வாதிட்டார்.

9. <u>மேல்முறையீட்டாளரின் சார்பில் சமர்பிக்கப்பட்ட எழுத்துபூர்வமான வாதுரை :-</u>

9.1 மேல்முறையீட்டாளர், தன்னுடைய எழுத்து பூர்வமான வாதுரையை 3.8.2016ல் சமர்பித்துள்ளார். அதில் உள்ள வாதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. Only after 17 years, the respondents have directed the appellant to produce the no objection certificate from the PWD department to effect electricity connection for his well. But when the appellant approached PWD department

refused to issue the NOC citing the reason that the Well is situated within 200 meters from the river bed. Appellant when approached the office of the 1st respondent and explained his difficulty in obtaining the NOC, he was advised to apply for the transfer of service to some other Well or Borewell of the same land situated 200 meters away from the river bed. The Appellant, believing the words of the TNEB authorities, has applied for shifting of applied service connection to a Borewell situated 200 meters away from riverbed on 28.01.2016.

2. To the shock and surprise of the Appellant, the request for the shifting of service was rejected by the 3rd respondent in his letter dated 08.02.2016 citing the reason that the limitation period was lapsed unmindful of the fact that the time was already extended by him till 30.01.2016 and the application for shifting of service was made on 28.01.2016 which is well before the period of limitation. Another reason cited for rejecting the appellant's application is that the appellant has not obtained NOC from the PWD department. The 3rd respondent failed to note that the shifting of service was applied only because NOC could not be obtained from the PWD department and further he has failed to understand that the question of NOC will not arise in case of shifting the service to the said borewell since it is situated 200 meters away from the riverbed. The appellant is very well entitled for the shifting of service as per the circular dated 06-12-1997 in Circular memo No. SE/IEMC/Ees/AEE2/AE/F III/A-13(Tech Branch), which states that:-

"In modification to the orders already issued in the refernce cited, the shifting of agricultural service connection from the existing well to the another well belonging to the same consumer may be permitted in the case of the

proposed well being located within the jurisdiction of the same division with other conditions remain the same. However, such case shall be permitted by the Superintending Engineer of the circle concerned with on receipt of personal site inspection reports by the Executive Engineer / Operation & Maintenance concerned on the genuineness of the case. Each case shall be carefully examined and order passed by the Superintending Engineer based on the merits of each cases.

‘‘Also another circular dated 1.12.2011. In Lr.No.SE/RE&ID/EE/RE/ AE/F./Doc/D.119/2011 states that shifting can be done in the application stage itself.

3. The respondents have failed to consider the age of the appellant and genuiness of the case before rejecting the application for the shifing of service and it was rejected mechanically without any merits. A circular dated 30-07-1990, in Chairman’s circular Memo No. SE/IEMC/EE3/AEE2/D.408/90 (Techincal Brance), states that :-

“Shifting of agricultural service connection from the existing well to another well in another village belonging to the same consumer may be permitted in the case of the proposed well, being located within the jurisdiction of the same Section even if it is not in the same distributioin group transformers. However, such cases shall be permitted by Superintending Engineer of the circle concerned with on receipt of personal site inspection reports by the Asistant Executive Engineer on the genuineness of the case. Each case shall be carefully examined and orders passed by the Superintending Engineer based on the norms of each case to ensure against abuse“

Whereas the respondents miserably failed to understand that the appellant is an age old agriculturist and begged for shifting of service on the bonafide reason.

4. Now the respondents wanted the appellant to make a fresh application for service connection to effect the electricity service to the said bore well and wait for another 23 years to get the electricity connection. This conduct of the respondents is unjust, unfair and against the principles of natural justice.

5. The appellant is very well entitled to get the service connection under the doctrine of legitimate expectation and Poonam Verma & ors. Vs. Delhi Development Authority [2007 (14) SCALE 485], the legitimate expectations is explained as follows: What is legitimate expectation? Obviously, it is not a legal right. It is an expectation of a benefit, relief or remedy, that may ordinarily flow from a promise or established practice and the expectation should be legitimate, that is, reasonable, logical and valid.

6. In Dr. (Mrs.) Chancal Goyal Vs. State of Rajasthan, Hon'ble Apex Court held that the societies were entitled to a 'legitimate expectation' that the past consistent practice in the matter of allotment will be followed even if there was no right in private law for such allotment. The authority was not entitled to defeat the legitimate expectation of the societies as per the previous seniority list without some overriding reason of public policy as to justify change in the criterion. No such overriding public interest was shown. According to the principle of 'legitimate expectation', if the authority proposed to defeat a person's legitimate expectation, it should afford him an opportunity to make a represenation in the matter. Further in Union of India Vs. Hindustan Development corporation /SC/0219/1994, Hon'ble Apex Curt observed "that

decision taken by the authority must be found to be arbitrary, unreasonable and not taken in public interest where the doctrine of legitimate expectation can be applied.“

7. Also the respondents having kept quiet for a period of 17 years from the date of appellant’s application, they are estopped from rejecting the said application in view of doctrine of promissory estoppel. In Motilal Padampat Sugar Mills Co. Ltd. v. State of U.P., (1979) 2 SCC 409, Apex Court discussed the doctrine of promissiory estoppel in great details and laid down the various propositioins including the following:

> “The true principle of promissory estoppel, therefore, seems to be that where one party has by his words or conduct made to the other a clear and unequivocal promise which is intended to create legal relations or afect a legal relationship to arise in the future, knowing or intending that it would be acted upon by the other party to whom the promise is made and it is in fact so acted upon by the other party, the promise would be binding on the party making it and he would not be entitled to go back upon it, if it would be inequitable to allow him to do so having regard to the dealings which have taken place between the parties, and this would be so irrespective of whether there is any pre-existing relationship between the parties or not.“

8. The respondents have failed to note that right to electricity connection is a fundamental right as guaranteed in the Constitution of India, that too the service connection sought for that agricultural purpose ought not to have rejected by the respondents since it will affect the very livelihood of the appellants family and failed to understand that in our country there are 70% of

the people are agricultural dependants. Hon'ble Madras High Court in Seemanthini Vs. The Chairman, TNEB has held that "it is needless to add that the Right to Electricity service connection is virtually a part of the fundamental rights guaranteed under Article 21 of the Constitution of Inida"

9. Thus for the aforesaid reasons, your goodself may direct the respondents to effect the electricity service connection to the Borewell in S.F. No. 69/2A by allowing this appeal.

10. <u>எதிர்மனுதாரரின் எழுத்துப்பூர்வமான வாதுரை</u>

10.1 மேற்படி விண்ணபத்தின் பேரில் சிறப்பு முன்னுரிமை திட்டத்தில் மின்இணைப்பு பெற்றுக் கொள்ள விண்ணபதாரருக்கு 29.10.2010ல் 30 நாட்கள் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொது பணித்துறையினரின் தடையின்மை சான்று பெற்று புதிய மின்இணைப்பு பெற இயலாத சூழ்நிலை உள்ளதால், மேற்படி விண்ணபத்தை மனுதாரருக்கு பாத்தியப்பட்ட க.ச.69/2A, கொமாரபாளையம் கிராமத்திலுள்ள ஆழ்குழாய் கிணற்றுக்கு மாற்றம் செய்துதர 30.1.2016ல் மனுதாரர் விண்ணப்பித்துள்ளார். மேற்படி கிணறு மாற்றம் கோரியுள்ள கோப்புகளை ஆய்வு செய்ததில் தற்பொழுது மாற்றம் கோரும் க.ச. 69/2Aல் உள்ள பூமியினை திரு. பி. குமாரசாமி த/பெ பெரியதம்பி கவுண்டர் அவர்கள் மேற்படி 30 நாட்கள் அறிவிப்பு கடிதம் 29.10.2010 அன்று வழங்கப்பட்ட பின்பு அதாவது 1.12.2010 அன்றுதான் கிரையம் பெற்றுள்ளார். அதன் கிரையப்பத்திர நகல் இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

10.2 மனுதாரர் பதிவு செய்துள்ள அசல் விண்ணப்பத்தின்பேரில் மின்இணைப்பு பெற வாய்ப்பில்லை என்ற காரணத்தால் அறிவிப்பு கடிதம் கிடைக்கப் பெற்றபின் கிணறு மாற்றம் செய்திடவேண்டும் என்ற நோக்கத்தில் க.ச. 69/2A ல் உள்ள பூமியினை கிரையம் செய்துள்ளார். எனவே மாண்புமிகு தமிழ்நாடு மின்சார குறைதீர்ப்பாளர் அவர்கள் மனுதாரரின் மேல்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து ஆணை வழங்கிட பணிவுடன் வேண்டப்படுகிறது.

11. **<u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு :-</u>**

இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும் பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக உள்ளன.

(i) விவசாய விண்ணப்பங்களுக்கு தயார் நிலையை பதிவு செய்வதற்கு விதிகளின்படி தரப்பட்டுள்ள கால அவகாசம் எவ்வளவு ?

(ii) ஒரு சர்வே எண்ணில் உள்ள கிணற்றிற்கு பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தை வேறு கிணற்றிற்கு மாற்றம் செய்வதற்கு உரிய விதிமுறைகள் என்ன?

(iii) ஆற்றுப்படுகையின் அருகிலுள்ள கிணற்றில் மின் இணைப்பு வழங்க பொதுப் பணித் துறையின் தடையின்மை சான்று அவசியமா?

(iv) மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட பின்புதான் பொதுப்பணித்துறையின் தடையின்மை சான்றை பெற வேண்டும் என்ற விதி அமலுக்கு வந்துள்ளதால் அவரின் மாற்றம் கோரும் விண்ணப்பம் ஏற்கப்பட வேண்டும் என்ற வாதம் ஏற்புடையதா?

12. **<u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு</u> :–**

**12.1** விவசாய மின் இணைப்புகளை பொருத்தவரையில், தயார் நிலையை பதிவு செய்வது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி (Supply Code) மற்றும் பகிர்மான விதி (Distribution Code) தொகுப்பில் எதுவும் கூறப்படவில்லை. எனவே, உரிமம்தாரர் கூறிய விதிகளைத்தான் பின்பற்ற வேண்டும்.

**12.2** எதிர்மனுதாரர் விவசாய மின் இணைப்பு கேட்கும் விண்ணப்பதாரர்கள் தங்களின் மனுவின் பேரில் தயார் நிலையை பதிவு செய்ய கொடுக்கப்பட்டுள்ள **90** நாட்கள் முடிந்த **5** வருடங்கள் வரை, தயார்நிலையை பதிவு செய்யலாம் என்று தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின் **22.9.2009** நாளிட்ட கடிதத்தை ஆராய விரும்புகிறேன்.

*“1. In cases of delay in reporting readiness of agricultural applications even beyond the extended period of one year, extension of time may be given to the original applicant/ legal heirs, as the case may be for entering readiness upto 5 years from the date of expiry of 90 days notice period once the party has attained the normal*

*seniority. However, this should not be applicable to purchaser of the land who purchases the land after expiry of 90 days notice. 2. The applications which were kept pending (except court case/ dispute case after completing 5 years from the date of expiry of 90 days notice period may be cancelled and intimated to the applicant. 3. Cancelled applications need not be revoked. 4. Applicants whose applications released / readiness entered, but supply was not availed due to court case / dispute supply may be effected without any time limit, if the case is ended in favour of the applicant on priority. The receipt of this letter may be acknowledged."*

12.3 மேற்கண்ட ஆணையினை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது ஒரு விவசாய மின் இணைப்பு வேண்டும் விண்ணப்பதாரர் தன்னுடைய தயார் நிலையை, ஏற்கனவே வழங்கப்பட்ட ஒருவருட கால அவகாச நீட்டிப்பிற்கு பின்பும் விண்ணப்பதாரர் / விண்ணப்பதாரரின் வாரிசுக்கு தங்களது தயார் நிலையை பதிவு செய்ய 90 நாட்கள் அறிவிப்பு கடிதத்தின் காலக்கெடு முடிந்த 5 வருடங்கள் வரை காலநீட்டிப்பு வழங்கலாம் என்று தெரிகிறது. மேலும் இது சாதாரண வரிசையிலுள்ள (Normal) பதிவு மூப்பின்படி வழங்கப்படும் அறிவிப்புகளுக்குத்தான் பொருந்தும். மேலும் மேற்கண்ட விதி, தயார் நிலையை பதிவு செய்யக்கோரி விடுத்த அறிவிப்பின் 90 நாட்கள் கடந்த பின்பு மேற்கண்ட நிலத்தை வாங்கியவர்களுக்கு பொருந்தாது என்றும் தெரிகிறது (13.12.2010 நாளிட்ட ஆணையின்படி, மேற்கண்ட கால அவகாசம் நிலத்தை வாங்கியவர்களுக்கும் பொருந்தும் என்று தெரிகிறது). மேலும் 90 நாட்கள் அறிவிப்பு கடிதம் கொடுக்கப்பட்டு 5 வருடங்கள் கழிந்த விவசாய விண்ணப்பங்கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் அவ்வாறு ரத்து செய்த விவரம் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிகிறது. ரத்து செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திரும்ப எடுத்துக்கொள்ள முடியாது என்றும் தெரிகிறது.

12.4 மேற்கண்ட தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின் 22.9.2009 நாளிட்ட ஆணையின்படி விவசாய விண்ணப்பங்கள் சாதாரண வரிசையின் மூப்பு அடிப்படையில் தயார்நிலையில் பதிவு செய்ய கோரி கொடுக்கப்பட்ட அறிவிப்பிலுள்ள காலக்கெடுவினை 90 நாட்கள் முடிந்த நாளிலிருந்து ஐந்து வருடங்கள் வரை விண்ணப்பதாரர் அல்லது அவர்களின் வாரிசுகள் தங்கள் தயார் நிலையை பதிவு செய்து கொள்வதற்கு கால அவகாசம் வழங்க வாரிய விதிகளில் இடமுன்டு என்று தெரிகிறது.

**13. <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>**

13.1 விவசாய மின்இணைப்பை வேறு கிணற்றிற்கு மாற்றம் செய்வது சம்பந்தமாக மின்சார வழங்கல் விதித்தொகுப்பு மற்றும் விவசாய பகிர்மான விதிதொகுப்பு இனங்களில் எதுவும்

கூறப்படவில்லை. எனவே, உரிமைதாரர் ஏற்படுத்திய விதிகளைத்தான் பின்பற்ற வேண்டும். விவசாய மின்இணைப்பை மாற்றுவதற்கான விதிகளில் விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தில் உள்ள கிணற்றை மாற்றுவதற்கும் பெருந்தும் என்று மின்சார வாரியத்தலைவர் **5–12–1983**ல் வெளியிடப்பட்டுள்ள குறிப்பாணையில் தெரிவித்துள்ளார். மேலும், உறுப்பினர்/பகிர்மானம் அவர்கள் **28–12–1991**ல் அனைத்துத் தலைமைப் பொறியாளர் பகிர்மானத்திற்கும் அனுப்பிய சுற்றறிக்கையிலும் மேற்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார். எனவே, விவசாய மின்இணைப்பை மாற்றுவதற்கான விதிமுறைகள் தான் விவசாய மின்இணைப்பு விண்ணப்பத்தை வேறு கிணற்றிற்கு மாற்றவும், கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிகள் ஆகும் என்று தெரிய வருகிறது. விவசாய மின்இணைப்பை மாற்றும் விதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:–

(A) Memo No.SE/RE&LL/LO/AE4/GW/114/dt. 17-03-1978:-

It has been brought to notice that many new applicants for power supply try to take advantage of the relaxations given in the two memos quoted under ref.1 and 2 for shifting of services and attempt to get supply circumventing the priority by initially stating that they are co-owners of wells and later on applying for shifting their service to a new location on the plea of "Non-availability of water".

The instructions issued in memos cited 1 and 2 are therefore partially modified as under :

1. The words "non-availability of water" in memo cited (1) are "hereby" deleted.
2. Shifting of agricultural service to a new location may be permitted for the same person due to dryness of well provided the new location is in the same village. The work of shifting should be done as deposit contribution work.
3. Shifting should not be permitted to a new location outside the village. Such cases should be treated as new applications for power supply and dealt with as per rules according to priority, technical feasibility and viability of each work.
4. Shifting of pump sets of enlisting co-owners of wells can also be done as per (2) above only.
5. Extension of supply to new applicants as co-owners of wells may be effected provided their ownership of well is certified by an officer of the Revenue Department not below the rank of a Tahsildar and (2) it is accompanied by a certificate from the Project Officer (ARDC) to the effect that there is adequate water for both the pump sets in the same well.

(B) Chairman Memo No.SE/RE/DE/SS/A1/C 473-1/83, dated 05-12-1983.

1. Shifting of agricultural services from the existing well to another well can be permitted in respect of the following cases subject to technical feasibility:-

(i) Shifting from one well to another belonging to the same consumer within the same distribution group of transformers irrespective of the village and

(ii) Shifting from one well to another belonging to the same consumer within the same village even if it involves a change from one distribution group of transformers to another.

2. The above work will be done as a deposit contribution work.

3. This concession will be applicable even in respect of pending applications i.e. where the service has still not been sanctioned but the applicant desires to change the location of the service to another well owned by him.

4. Particular care should be taken to ensure that this concession is not abused for trafficking in agricultural service connections. The Assistant Divisional Engineer concerned should personally enquire into the case and satisfy himself that the new well and the lands to be irrigated by it belong to the consumer and the request of the consumer is for bonafide reasons. He should record his inspection note in this regard on the relevant file.

(C) Memo No.SE/RE&I/(D)/DE/SS/A1/C473-3/84,(Technical Branch), dated 10-07-1984

Sub: Electricity – shifting of services from one well to another

Ref: Memo No.SE/RE&I(D)/DE/SS/A1/C/473-1/84, dt.5.12.83. Memo No.SE/RE&!(D)/DE/SS/A1/C.473-2/84, dt.17.5.84

****

Further, to the instructions issued to memos cited on shifting of agricultural services at the request of the consumers the following instructions are issued. Requests for extension of supply to a well owned by the applicant in a different location in lieu of the one for which application was presented may also be considered even if estimate for the work has been sanctioned subject to the condition that the works should not have been taken up as on the date of request of the applicant. Conditions outlined in paras 1 and 2 of memo cited vide ref.(1) shall however be applicable for such shifting and instructions contained in para4 of the memo should be scrupulously followed.

(D) Memo No.SE /RE&I/(D)/DE(SS)/AE.w1/C473-5/84,(Technical Branch),

dt, 7-1-1985

Sub: Electricity – shifting of agricultural service from one well to another –

Reg. Ref: (i) Memo No.SE/RE&I(D)/DE(SS)/A1/C/473-1/84, dt.5.12.83. (ii) Memo No.SE/RE&!(D)/DE/(SS)/A1/C.473-2/84, dt.17.5.84.
(iii) Memo No.SE/RE&!(D)/DE/(SS)/A1/C.473-3/84, dt.10.7.84.

****

The last para of the memo third cited shall be deleted and the following shall be substituted. Conditions outlined in paras (1) subparas (i) and (ii) and para (4) of memos cited vide ref.(1) shall however be applicable for such shifting and instructions contained in paras should be scrupulously followed.

(E) <u>Chairman's Circular Memo No.SE/IEMC/EE3/AEE2/D.408/90 (Technical Branch), dated 30-07-1990</u>

*********

Shifting of agricultural service connection from the existing well to another well in another village belonging to the same consumer may be permitted in the case of the proposed well, being located within the jurisdiction of the same Section even if it is not in the same distribution group transformers. However, such cases shall be permitted by Superintending Engineer of the Circle concerned with on receipt of personal site inspection reports by the Assistant Executive Engineer on the genuineness of the case. Each case shall be carefully examined and orders passed by the Superintending Engineer based on the norms of each case to ensure against abuse.

(F) <u>Circular Memo No. SE/IEMC/EEs/AEE2/AE/F III/A-13(Tech Branch), dated 06-12- 1997.</u>

In modification to the orders already issued in the reference cited, the shifting of agricultural service connection from the existing well to the another well belonging to the same consumer may be permitted in the case of the proposed well being located within the jurisdiction of the same division with other conditions remain the same. However, such case shall be permitted by the Superintending Engineer of the circle concerned with on receipt of personal site inspection reports by the Executive Engineer / Operation & Maintenance concerned on the genuineness of the

case. Each case shall be carefully examined and order passed by the Superintending Engineer based on the merits of each cases.

(G) Memorandum No.SE/IEMC/EE3/AEE2/AE/F.S. 23/D.382/89,(Techl.Br.) dated 02-07-1999.

(i) If any consumer under normal priority requests for change of well from the original location to a new location, then no increase in the load will be permitted, under normal priority.
(ii) If the applicant, under normal priority requests for change of well from the original location to a new location with the increase in load then, he may be asked to avail supply under RSFS in the application stage itself.
(iii) If the consumer does not agree for the above, shifting alone may be permitted for the original load, if the required conditions for shifting are satisfied.

(H) Memo No.SE/RE&1(D)/EE/RE/A1/F.Doc/D.2841/04, (Technical Branch), dated 10-12-2004.

Of late, clarifications are being requested by the field SEs / CEs in shifting of agriculture service connection effected under SFS category. Shifting of agricultural service to another well belonging to the same party is to be considered only when the existing well has gone dry.

(I) Letter No.SE/RE&I(D)/EE/RE/A1F.Doc/D.655/2008 (Technical Branch), dated 05-05- 2008.

In modification to the orders already issued in the reference cited, the shifting of agricultural service connection from the existing well to the another well belonging to the same consumer from one division to another division within the Circle may be permitted by the Superintending Engineer of the Circle concerned. (i) with on receipt of personal site inspection reports by EE / O & M concerned on the genuineness of the case and (ii) with the condition that the date of registration of application of the service for which shifting is requested should be cleared in the Division for which shifting is proposed. The other conditions applicable for shifting remain the same. The above instructions also applicable for pending applications, with the above

conditions and the service may be effected under the category for which supply is requested.

(J) <u>Letter No,SE.RE I(D).EE.RE.1.F,Doc,.D,1519 .11Ï dt,1.12.2011</u>

Sub: Electricity – shifting of agricultural service connection – Reg.

Ref: 1. This Office Lr.No.SE/RE&1/(D)/EE/RE/A1/D241, dt.15.2.2011.
2. This Office Lr.No.SE/RE&I(D)/EE/RE/A1/D6558 dt.6.6.2008.

In the reference (1) letter cited, instructions were issued to consider shifting of agricultural service connection irrespective of the reasons submitted by the applicant under DCW basis.

In supersession of the instructions issued vide reference (1) letter, the following instructions are issued in addition to the instruction issued vide reference (2) letter cited:-

1.0. Shifting of existing agriculture service connection may be permitted only if the existing and proposed location of the land and well/bore well are having agriculture operations.

2.0. The shifting of agriculture service connection may be considered in case of dryness, insufficient water and due to water pollution in the existing well / bore well.

3.0. Necessary certificate from the concerned authorities should be obtained for the reasons stated by the applicant.

4.0. Shifting of existing agriculture service connection should be done under DCW basis.

5.0. These instructions are applicable for all categories of existing agriculture service connections such as Normal, RSFS Schemes, etc.

6.0. This is also applicable for change of location of the well / bore well requested at the application stage itself.

13.2. மேற்கண்ட சுற்றறிக்கை, மற்றும் குறிப்பாணைகளின்படி கீழ்க்கண்ட விதிகளின் பேரில்தான் விவசாய மின்இணைப்பு (அல்லது) விவசாய இணைப்பு விண்ணப்பத்தின் மனுவை வேறு கிணற்றிற்கு மாற்ற முடியும் என்று தெரிகிறது.

(i) கிணற்றில் தண்ணீர் இல்லை என்றாலும் நீர் விவசாயத்திற்கு தேவையான அளவு இல்லையென்றாலும், நீர் மாசுபட்டு இருந்தாலும் ஒருவரின் விவசாய மின்இணைப்பு அவருக்குச் சொந்தமான வேறு கிணற்றிற்கு மாற்றப்படலாம். ஆனால், மாற்றப்படுவதற்கு கூறப்படும்

காரணத்திற்கான சான்றுகள் சம்பந்தப்பட்ட அதிகாரம் உள்ளவர்களிடமிருந்து பெறப்பட்டு இருக்க வேண்டும்.

(ii) இரண்டு கிணறுகளும் ஒரே மின்பகிர்மானத்திலுள்ள மின்மாற்றிகளில் இருக்கவேண்டும். அவ்வாறு இருக்கும்பட்சத்தில் அவை வேறு கிராமங்களில் இருக்கலாம்.

(iii) இரண்டு கிணறுகளும் ஒரே கிராமத்தில் இருந்தால் மின்பகிர்மானம் வேறாக இருந்தாலும், மாற்றப்படலாம்.

(iv) மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு ஆனால் வேலை தொடங்கப்படாமல் இருக்கும் நிலுவையிலுள்ள விண்ணப்பங்களுக்கும் இது பொருந்தும். இந்தச் சலுகையை (concession) தவறாக பயன்படுத்தப்படக்கூடாது என்பதற்காக அந்த பகுதி உதவி கோட்ட பொறியாளரால் விசாரிக்கப்பட்டு புதிய கிணறும், நீர் பயன்படுத்தப்படும் நிலங்களும், நுகர்வோருக்கே சொந்தம் என்பதையும், நுகர்வோரின் கோரிக்கை உண்மையான காரணங்களுக்காகத்தான் (bonafide reasons) என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும் உதவி கோட்ட பொறியாளரின் அறிக்கை அந்தக் கோப்பில் இடம் பெற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

(v) மேலும் அந்த வேலைக்கு ஆகும் செலவை, நுகர்வோரிடம் வசூலிக்க வேண்டும். மதிப்பீடு DCWல் செய்யப்படவேண்டும். ஆனால், நிலுவையிலுள்ள விண்ணப்பத்திலுள்ள கிணற்றிற்கு பதில் வேறு கிணற்றில் பெற விரும்பினால் DCW முறையில் மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியமில்லை. (DCW-ல் செய்யவேண்டும் என்ற நிபந்தனை 7.1.1985 நாளிட்ட வாரியத்தால் இடப்பட்டுள்ள ஆணையில் நீக்கப்பட்டுள்ளது)

(vi) (அ) சாதரண வரிசையில் (Normal priority) உள்ள நுகர்வோர், கிணறு மாற்ற விரும்பினால், மின்பளுவை (load) அதிகரிப்பதற்கு அனுமதியில்லை.

(ஆ) சாதாரண வரிசையில் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர் மின்பளுவை அதிகரிக்க வேண்டும் என்றால், விண்ணப்பதாரர், மின்இணைப்பை SFS முறையில் பெற வேண்டும்.

(இ) மேற்கண்ட முறையில் (SFS–ல்) மின்இணைப்பை பெற விரும்பாவிடில், விண்ணப்பித்த மின்பளுவுடன் கிணறு மாற்றப்படலாம், மற்ற மாற்றத்திற்கான விதிகள் நிறைவு செய்யப்படவேண்டும்.

(vii) SFS முறையில் பெறப்பட்ட மின்இணைப்புகளும், விவசாய மின்இணைப்பை மாற்றுவதற்கான விதிமுறைகளின்படி இருந்தால் மாற்றிக் கொள்ளலாம்.

(viii) ஒரே பிரிவு அலுவலகத்தின் எல்லைக்குட்பட்டு வரும் ஒரு கிராமத்திலுள்ள கிணற்றிலிருந்து மறு கிராமத்திலுள்ள கிணற்றிற்கு அவை வெவ்வேறு மின்பகிர்மான மின்மாற்றிகளில் இருந்தாலும் மாற்றம் செய்யலாம். ஆனால் அந்த விண்ணப்பத்தின் நம்பகத்

தன்மையைபற்றி உதவி செயற்பொறியாளரின் ஆய்வறிக்கையின் பேரில் மேற்பார்வை பொறியாளரால் அனுமதி அளிக்கப்படவேண்டும்.

(ix) ஒரு கோட்டத்திற்குள் இருக்கும் ஒரு கிணற்றிலிருந்து மற்றொரு கிணற்றிற்கு மாற்றம் கோரும் விண்ணப்பத்தின் நம்பகத் தன்மையை, அந்த கோட்டத்தின் செயற்பொறியாளர் ஆராய்ந்து அளிக்கும் அறிக்கையின் பேரில் மேற்பார்வை பொறியாளரால் அனுமதி அளிக்கப்படலாம்.

(x) ஒரு கோட்டத்திலுள்ள விவசாய மின்இணைப்பு வேறுகோட்டத்திலுள்ள அந்த மின்நுகர்வோருக்குச் சொந்தமான கிணற்றிற்கு மாற்றிக் கொள்ள மேற்பார்வை பொறியாளர் அனுமதிப்பதற்கு கீழ்கண்ட விதிகள் விதிக்கப்பட்டுள்ளன.

(அ) செயற்பொறியாளர் அவர்கள் அந்த இடத்தை ஆராய்ந்து அந்த விண்ணப்பத்தின் நம்பகத்தன்மை (genuineness)ஐ பற்றி சான்று அளித்திருக்க வேண்டும்.

(ஆ) எந்த விண்ணப்பத்திற்கு கிணறு மாற்றம் கோரப்படுகிறதோ அந்த விண்ணப்பத்தின் பதிவு தேதி வரை உள்ள விண்ணப்பம் மாற்றம் கோரப்படுகிற கோட்டத்தில் மின்னிணைப்பு பெற்றிருக்க வேண்டும்.

14. <u>வழக்கெழு வினா மூன்றிற்கான தீர்வு:—</u>

**14.1** மேல்முறையீட்டாளர், ஆற்றின் கரையிலிருந்து **200** மீட்டர் தூரத்திற்கு உள்ள கிணறுகளில் விவசாய மின் இணைப்பு வழங்க பொதுப் பணித்துறையில் தடையின்மை சான்றை பெற்று சமர்பிக்க வேண்டும் என்று ஒழுங்குமறை ஆணையமோ அல்லது தமிழக அரசும் எந்த ஆணையையும் பிறப்பிக்கவில்லை எனவே **19.5.1994** நாளிட்ட சுற்றறிக்கை சட்டத்திற்கு புறம்பானது என்று வாதிட்டுள்ளார்.

**14.2** எதிர்மனுதாரர், பொதுப்பணித்துறையின் தடை இன்மை சான்று **19.5.94** நாளிட்ட குறிப்பாணையின்படி கேட்கப்படுகிறது என்று வாதிட்டுள்ளதால் அந்த குறிப்பாணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*<u>Circular Memo No.SE/IEMC/EE3/AEE2/AE/D.178/94, (Technical Br) Dated 19.5.94</u>*

*Sub : Electricity – Extension of supply to the Agricultural pumpsets situated in the River/Channel /Bank – Instruction – Reg.*

*Ref : Lr.No.SE/IEMC/EE3/AEE2/D.801/93, dt.19.11.93.*

******

*Of late,it is seen that number of reprsentations and references are being received from the agricultural consumers/ government, regarding extension of supply to the agricultural pumpsets situated near the rivers/canals.*

*There are also reference received from the Chief Engineer/Superintending Engineers/Public Works Department of concerned jurisdiction stating that the agricultural pumpsets in the wells near the rivers/canals are illegally used for drawing water from the river/canals directly. In the letter cited under reference, it has been instructed not to effect supply to the agricultural pumpsets situated within 200 mtrs. from the river banks.*

*Hence, the filed officers are requested to adhere the folowig instructions in future wihtout fail.*

1. *The applications for extension of supply to the agricultural pumpsets especially in cases under self financig scheme have to be thoroughly scrutinsed and the cases where the wells lie within 200 metres from any river bank / canal/channel/any water resources should not be entertained and they should be returned at the intial stage itself even before collection of the registration fee Rs.500/-*
2. *In cases where an individual applicant/some society, as the case may be applies for extension of supply to the agricutural service by drawing water from well situated within 200 metres from any river /any other water resources, the filed officers themselves have to verify whether the G.Os or any other certificate issued are genuine and satisfy the actual distance of the well from the river and other resources in accordance with the G.Os any other certificate issued.*
3. *For the cases of applications under normal priority/self finance scheme for which extension of supply is requested to the wells lying witin 200 metres from any river bank/any other water resources have already been entertained and processed before the issue of the above instructions and the progress in varies stages like*
   - *i) Reported readiness/work completed.*
   - *ii) Reported readinesss with party paid the amount/works not taken up/partly completed*
   - *iii) Reported readiness/party not paid the amount.*

*then in all above three cases supply should be extended only on submission of No Objection Certicate from the concerned Superintending Engineer/Public Works Department by the parties.*

*The above stipulations will also apply to additional loads in agricultural services where the wells are within 200 metres from the bank of water resources.*

*In cases of the applications requiring supply to the agricultural pumpsets for the wells situated 200 metres away from any river/water resources the filed officers themselves can process after satisfying about the distance and checking the genuiness of certificate issued by the authorities concerned.*

*P. Suresh Chander Pal.*
*(Member(Distribution)*

14.3 மேற்கண்ட குறிப்பாணையை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பங்கள் ஆழ்ந்து ஆராயப்பட்டு அந்த கிணறுகள் ஆற்றுபடுகை கால்வாய் / வாய்க்கால் ஆகியவற்றிலிருந்து **200** மீட்டர் தூரத்திற்குள் இருந்தால் அவைகள்,

முதல் நிலையிலேயே விண்ணப்பதாரர்களிடம் பதிவு செய்யப்படாமல் திரும்ப அளிக்கப்பட வேண்டும். மேலும், தயார் நிலையை பதிவு செய்திருந்து வேலைகள் முடிவு பெற்றிருந்தாலும் அல்லது தயார்நிலை பதிவு செய்யப்பட்டு கட்டணம் செலுத்தப்பட்ட வேலை பாதி முடிக்கப்பட்டு / வேலை ஆரம்பிக்காமல் இருந்தாலும் அல்லது தயார் நிலை பதிவு செய்யப்பட்டு கட்டணங்கள் செலுத்தப்படாமல் இருந்தாலும், பொதுப்பணித்துறையின் சம்பந்தப்பட்ட மேற்பார்வை பொறியாளரின் தடையின்மை சான்றை பெற்றபின்புதான் மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. **19.5.2014** நாளிட்ட குறிப்பாணையில் **19.11.93** நாளிட்ட கடிதம் பார்வையில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அந்த கடிதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>Letter No.SE/IEMC/EE3/AEE2/D.801/93, (Technical Branch) Dated 18/19.11.1993</u>*

*Sub: Electricity – Extension of supply to agricultural pumpsets situated in the banks of Bhavani and Cauvery River under SFS – Orders Issued – Reg.*

*Ref : 1.Lr.No.2037/AEE/GI/NOC/93, dt.30.8.93*
*2.Lr.No.SE/IEMC/EE3/AEE2/D.703/93, dt.17.9.93*
*3.Lr.No.25318/AEE/GI/F.NOC/93-1, dt.14.9.93*
*4.Lr.No.SE/IEMC/EE3/AEE2/D.736/93, dt.12.10.93.*
*5.Endt.No.SE/IEMC/EE3/AEE2/D.772/93, dt.5.11.93.*

******

*Approval to effect supply to the agricultural pumps situated in the river bank of Bhavani and Cauvery (except Mettur Canal . Rajakomarapalayam and Mohanur Channels) has been accorded vide the reference(2) and (4).*

*Subsequently, representation from agriculturals association have been received by the Government stating that the power supply effected to the agricultural wells situated on the river banks is utilised illegally for tapping water directly from the river at later date.*

*Hence, they have requested Tamil Nadu Electricity Board not to effect supply to pumpsets situated on the river banks until further orders from the Government.*

*The matter has been examined again in the light of the representations received. The instructions already issued vide reference 2 and 4 cited are cancelled as already communicated in the reference (5) cited.*

*Hence, the Chief Engineer/Distribution/Coimbatore is requested not to effect supply to the agricultural pumpsets situated within 200 metres from the river banks until further orders of the Government in this regard.*

*K. Nagarajan*
*Member(Distribution)„*

13.4 மேற்கண்ட ஆணையை கூர்ந்து பார்க்கும் பொழுது நாம் அறிவது, உறுப்பினர்(பகிர்மானம்) அவர்களின் 19.11.93 நாளிட்ட ஆணையின்படி அரசின் உத்தரவு வரும் வரை ஆற்றுப்படுகையிலிருந்து 200 மீட்டருக்குள் உள்ள விவசாய மின் இணைப்புகள் வழங்க வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

13.5 மேற்கண்ட பத்திகளின்படி ஆற்றுபடுக்கையிலிருந்து 200 மீட்டர் தூரத்திற்குள் உள்ள விவசாய மின் இணைப்புகளுக்கு பொதுப்பணித்துறையின் தடையின்மை சான்று அவசியம் என்று தீர்வு செய்யப்படுகிறது.

14. <u>வழக்கெழு வினா நான்கிற்கான தீர்வு :-</u>

14.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் 31.12.1993ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண் : 393/93–94 ஆகும். ஆனால் ஆற்றுபடுகையின் 200 மீட்டர் தூரத்திற்குள் உள்ள கிணறுகளில் உள்ள விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு பொதுப்பணித்துறையின் தடையின்மை சான்று வேண்டும் என்று தெரிவிக்கும் குறிப்பாணை 19.5.1994ல் தான் அமலுக்கு வந்துள்ளது. எனவே மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் சமர்பிக்கும் பொழுது அந்த விதி இல்லை எனவே, அவரின் விண்ணப்பத்தை வேறு கிணற்றிற்கு மாற்றி மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

14.2 மேலும், விண்ணப்பம் பதிவு செய்தபின் சுமார் 23 வருடங்கள் கழிந்த பின்பு, பொதுப்பணித்துறையின் தடைஇன்மை சான்று இல்லை எனவே மின் இணைப்பு வழங்க முடியாது என்று கூறுவது நியாயமில்லை என்றும் வாதிட்டுள்ளார்.

14.3 மேலும், உரிமம்தாரரின் 30.7.1990, 6.12.97 மற்றும் 1.12.2012 நாளிட்ட ஆணைகளை சுட்டிக் காட்டி மேற்கண்ட குறிப்பாணைகளின்படி அவரின் விண்ணப்பத்திற்கு கிணற்றை மாற்றி மின் இணைப்பை வழங்கலாம் என்று வாதிட்டுள்ளார்.

14.4 மேலும், Poonam Varma & others Vs Delhi Development authority மற்றும் பலர் எதிர் டெல்லி டெவலப்மெண்ட் அதாரட்டி (2007 (14), SCALE 485) என்ற வழக்கின் தீர்ப்பு

மற்றும் Dr. (Mrs) Chanchal Goyal Vs Sidco Rajasthan and Union of India Vs Hindustan Development Corporation (SC/0219/1994) ஆகிய வழக்குகளில் மாண்புமிகு உச்சமன்றத்தின் legitimate expectation பற்றிய தீர்வுகளையும் சுட்டிக்காட்டி, legitimate expectation என்ற முறையில் தனக்கு மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

14.5 மேலும் Motilal Padampet Sugar Mills Co Ltd Vs State of UP (1979) SCC 409, என்ற உச்ச நீதிமன்ற வழக்கின் தீர்வையும் சுட்டிக்காட்டி, விண்ணப்பம் சமர்பித்து 17 வருடங்கள் கழிந்தபின்பு, விண்ணப்பத்தை தள்ளுபடி செய்வது promissory estoppel என்றும் வாதம் புரிந்துள்ளார்.

14.6 மின்சார இணைப்பு பெறுவது என்பது ஒரு அடிப்படை உரிமை. மேலும் விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணபத்தை நிராகரிப்பது விவசாயத்தை நம்பி வாழும் மேல்முறையீட்டாளரின் குடும்பத்தை பாதிக்கும் என்றும், நம் நாட்டில் 70 சதவிகித மக்கள் விவசாயத்தை தான் நம்பி வாழ்வதாலும் மேற்கண்ட காரணங்களாலும் சர்வே எண் 69/2A ல் உள்ள ஆழ்குழாய் கிணற்றிற்கு மின் இணைப்பை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

14.7 எதிர் மனுதாரர் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் பவானி ஆற்றின் கரைக்கு அருகில் 5 அடி தூரத்தில் உள்ளதால், அங்கு மின் இணைப்பு வழங்க வேண்டுமெனில் பொதுபணித்துறையின் தடையின்மை சான்று வேண்டும். பொதுப் பணித்துறையின் சான்று இல்லை என்பதால் அந்த விண்ணப்பம் தகுதியற்றது என்று ஆகிவிடுவதால் வேறு கிணற்றிற்கு மாற்றம் செய்ய முடியாது என்று வாதிட்டுள்ளார்.

14.8 மேல்முறையீட்டாளர், மின் இணைப்பு கேட்டு பதிவு செய்யப்பட்ட விண்ணப்பம் க.ச.எண். 10/1 இல் உள்ள திறந்த வெளி கிணற்றுக்கு ஆகும். வாரிய விதிகளின்படி ஒரு கிணற்றிற்கு பதிவு செய்யப்பட்ட விண்ணப்பத்தை வேறு கிணற்றிற்கு மாற்ற வேண்டும் எனில், விண்ணப்பித்த கிணற்றில் நீர் போதுமான அளவு இருக்க கூடாது, அல்லது நீர் மாசுபாட்டு

விவசாயத்திற்கு பயன்படாது என்று சான்று அளிக்கப்பட்டு இருக்க வேண்டும். இங்கு கிணறு மாற்றம் அவ்வாறான காரணங்களுக்காக கோரப்படவில்லை. எனவே, க.ச.எண் 69/2A இல் உள்ள ஆழ் துளை கிணற்றிற்கு விண்ணப்பத்தை மாற்ற முடியாது என்று எதிர்மனுதாரர் வாதிட்டுள்ளார்.

14.9 விண்ணப்பதாரர் தயார் நிலையை பதிவு செய்ய கொடுக்கப்பட்ட 90 நாட்கள் அறிவிப்பின் கெடு நாள் முடிந்த பின்பு 5 வருடங்கள் வரைதான் தயார்நிலையை பதிவு செய்ய கால நீட்டிப்பு வழங்க முடியும். இந்த மேல்முறையீட்டாளரின் 5 வருட கால அவகாசம் முடியும் நாள் 31.1.2016 ஆகும். ஆனால் முறையீட்டாளர் கிணறு மாற்றம் கோரும் விண்ணப்பம் சமர்பித்த நாள் 30.1.2016. ஒருநாளில் கால கெடு நீடிப்பு உயர் அதிகாரிகளிடம் பெற்று, தயார் நிலையையும் பதிவு செய்ய வேண்டும் என்பதால் போதுமான கால அவகாசம் இல்லை என்றும் எனவே, விண்ணப்பம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

14.10 இங்கு மேல்முறையீட்டாளர், தன்னுடைய விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் பதிவு செய்யும் பொழுது ஆற்றுக்கரையோரம் 200 அடி தூரத்திற்குள் உள்ள கிணற்றிற்கு மின் இணைப்பு பெற பொதுப் பணித்துறையின் தடையின்மை சான்று பெற வேண்டும் என்ற உத்தரவு இல்லை என்று வாதிட்டுள்ளார். இது விஷயமாக கீழ்கண்ட தகவல்கள் ஆராயப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| *(i)* | *மேல்முறையீட்டாளரின் விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பத்தின் பதிவு நாள்* | *பதிவு எண் : 313-93-94 நாள் 31.12.93* |
| *(ii)* | *பவானி ஆறு, காவேரி ஆகியவற்றின் கரைகளுக்கு 200 மீட்டர் தூரத்திற்குள் மின் இணைப்பு வழங்க வேண்டாம் என்ற வாரியத்தின் letter No.SE/IEMC/EE3/AEE2/D80/93 & Tech Branch Dated 18/19 .11.1993* | ***18/19.11.93*** |

14.11 மேற்கண்ட உறுப்பினர் (பகிர்மானம்) அவர்களின் 18/19–11–1993 நாளிட்ட ஆணையின்படி, ஆற்றங்கரையிலிருந்து 200 மீட்டர் தூரத்திற்குள் அமைந்துள்ள விவசாய பம்பு செட்களுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே,

மேற்கண்ட ஆணை மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட நாளான 31.12.1993ல் அமலில் உள்ளது என்பது தெளிவாகிறது. எனவே, அந்த விண்ணப்பம், பதிவு செய்வதற்கு தகுதியற்றது என்ற வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது.

14.12 மேலும், 29.10.2010 அன்று மேல்முறையீட்டாளருக்கு அவருடைய தயார்நிலையை பதிவு செய்ய வேண்டும் என்று கொடுக்கப்பட்ட அறிவிப்பின் 6வது விதியில் பொதுப்பணித்துறை/ வருவாய்துறை அதிகாரிகளிடமிருந்து தடையில்லா சான்று பெற்று பிரிவு அலுவலகத்தில் கொடுக்கப்படவேண்டும் என்று தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அந்த விதி கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

*xxx xxx xxx*
*6) மேற்படி கிணறு, ஆறு அல்லது கால்வாய்க் கரையோரம் இருப்பின் தற்போதுள்ள விதிமுறைப்படி பொதுப்பணித்துறை/வருவாய்த்துறை அதிகாரியிடம் தடையில்லாச் சான்றிதழ்(clearance certificate) பெறப்பட வேண்டுமேயானால் அவ்வாறு சான்றிதழ் பெற்று பிரிவு அலுவலரிடம் கொடுக்க வேண்டும்.*
*xxx xxx xxx*

14.12 செயற்பொறியாளர் / பொதுப்பணித்துறை, பவானி சாகர் அணைக்கோட்டம் அவர்கள் மேற்கண்ட கிணறு பவானி ஆற்றுங்கரையிலிருந்து 5 மீட்டர் தொலைவில் அமைந்துள்ளதால் தடையின்மை சான்று வழுங்க இயலாது என்று 14.3.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

14.13 என்னுடைய வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வின்படி ஒரு விவசாய விண்ணப்பத்தின் பதிவை ஒரு சர்வே எண்ணிலுள்ள கிணற்றிலிருந்து வேறு கிணற்றிற்கு மாற்ற வேண்டும் எனில், முதலில் பதிவு செய்யப்பட்ட கிணற்றில் போதுமான நீர் இல்லை அல்லது நீர் மாசுபட்டுள்ளது என்று சான்று பெற்றிருக்க வேண்டும். ஆனால் இங்கு கிணறு மாற்றம் கோருவதற்கு அந்த விதமான காரணங்கள் மேல்முறையீட்டாளரால் தெரிவிக்கப் படவில்லை, எனவே கிணறு மாற்றம் வாரிய விதிகளுக்கு இணக்கமாக இல்லை என்று தீர்வு செய்யப்படுகிறது. மேற்கண்ட வழக்கெழு வினாவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சில ஆணைகளைத்தான் மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால், சுற்றறிக்கைகள் அனைத்தையும் சேர்த்து படிக்கும்பொழுது எந்த நிலையில் கிணறு மாற்றம் ஏற்புடையது என்பது மேற்படி வினாவில் தீர்வு செய்யப்பட்டுள்ளது.

14.14 மேலும், எதிர்மனுதாரர், மாற்றம் கோரும் ஆழ்குழாய் கிணறு உள்ள நிலம் 1.12.2010 ஆண்டுதான் கிரையத்திற்கு வாங்கப்பட்டுள்ளது என்றும், தயார் நிலையை பதிவு செய்ய கொடுக்கப்பட்ட அறிவிப்பிற்கு பிறகுதான் மேற்படி நிலம், வாங்கப்பட்டுள்ளதால், அறிவிப்பு கொடுக்கப்பட்ட பின்பு கிணறு மாற்றம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் வாங்கப்பட்ட நிலம் என்பதாலும் மாற்றம் கோரமுடியாது என்று வாதிட்டுள்ளார்.

மேற்கண்ட சர்வேஎண். 69/2A என்ற பூமியினை மேல்முறையீட்டாளர் 1.12.2010 அன்றுதான் கிரயம் பெற்றுள்ளார் என்பது எதிர்மனுதாரர் சமர்ப்பித்துள்ள கிரையப்பத்திரத்தின் நகலிலிருந்து மேற்கண்ட கிரையப்பத்திரம் ஆவண எண். 7145/2010 நாள் 1.12.2010 ல் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிகிறது. எனவே, தயார்நிலையை பதிவு செய்ய அறிவிப்பு கொடுக்கப்பட்ட பின்பு அதில் கொடுக்கப்பட்டுள்ள கடைசி நாளான 3.12.2010 முடிவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் மேற்கண்ட நிலம் கிரையம் பெறப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரரின் வாதத்தை புறந்தள்ளி விடமுடியாது என்று நான் கருதுகிறேன்.

14.17 மேலும், இந்த மேல்முறையீட்டாளரின் விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் பொதுப்பபணித்துறையின் தடையின்மை சான்று இல்லை என்பதாலும், மின்இணைப்பு பெற பதிவு பெறுவதற்கு தகுதியற்ற விண்ணப்பம் என்பதாலும் நிராகரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்கனவே விண்ணப்பித்துள்ள கிணற்றில் தண்ணீர் இல்லை அல்லது மாசுப்பட்டுள்ளது என்ற காரணங்களின் அடிப்படையில்தான் வேறொரு கிணற்றிற்கு இணைப்பிணை மாற்ற இயலும். எனவே, மேல்முறையீட்டாளர் சுட்டிக்காட்டியுள்ள legitimate expectation மற்றும் promissory estoppel ஆகிய Principles இந்த வழக்கிற்கு பொருந்தாது என்றும் நான் கருதுகிறேன்.

14.18 மேலே, பத்திகளில் உள்ள வாதங்களின்படி மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான, அவருடைய விவசாயி விண்ணப்பத்திற்கு, கிணறு மாற்றம் செய்து, சர்வே எண் 69/2A ல் உள்ள

ஆழ்குழாய் கிணற்றிற்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்பது ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

**15.** <u>முடிவுரை</u> **:-**

15.1 மேலே பத்தி **14–**இல் உள்ள தீர்வின்படி, கோபி மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வில் மாற்றம் எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**15.2** மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.**41/2016** முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
**1)** திரு. P. குமாரசாமி,
த/பெ பெரிய தம்பி கவுண்டர்,
தவளகிரி தோட்டம்,
சிவியார் பாளையம்,
ஆலத்துகொம்பை கிராமம்
சத்தியமங்கலம்.

**2)** செயற் பொறியாளர்/சத்தியமங்கலம்,
கோபி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33A/4, சிவா காம்ப்ளக்ஸ்,
அத்தேனி ரோடு, சத்தியமங்கலம் **– 638 401.**

**3)** உதவி செயற்பொறியாளர்/கிழக்கு/சத்தியமங்கலம்,
கோபி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
**30,** நிர்மலா தியேட்டர் ரோடு,
சத்தியமங்கலம் **– 638 401.**

**4)** உதவி பொறியாளர்,
கொடிவேரி,
கோபி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
**7/2,** மாரியம்மன் கோவில் தெரு,
ஒட்டர்பாளையம், கொடிவேரி அஞ்சல்,
கோபி தாலுகா, ஈரோடு – **638 503.**

5) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
கோபி மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கச்சேரி தெரு, கோபிசெட்டிபாளையம் – 638 452.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

7) செயலாளர் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.